
3

இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி



இலங்கையின் தேசிய மறுமலர்ச்சி

1848 போராட்டத்தின் பின்னரிலிருந்து இலங்கை சுதந்திரம் பெற நடவடிக்கை மேற்கொண்ட காலப்பகுதி இரு கட்டங்களைக் கொண்டது.

- சமயம் மற்றும் தேசிய மறுமலர்ச்சிக் காலம் 1850 - 1915
  - பௌத்த சமய மறுமலர்ச்சி
  - இந்து சமய மறுமலர்ச்சி
  - இஸ்லாம் சமய மறுமலர்ச்சி
- அரசியல் போராட்டங்கள் நிலவிய காலம் 1915 - 1948

www.ikeet.lk


தேசிய மறுமலர்ச்சியின்
பின்னணி

இலங்கையில் நீண்ட காலம் நிலைத்திருந்த சமூக அமைப்பும் கலாசாரமும் ஐரோப்பியரின் வருகையுடன் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டன. இவர்கள் தத்தமது சமயத்தை பரப்புவதற்கு முயன்றமையால் இந்நாட்டின் பாரம்பரிய சமய, கலாசாரங்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்பட்டன.

தமது கலாசாரங்கள் எதிர்நோக்கிய ஆபத்தான நிலையால் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையில் பௌத்த, இந்து மற்றும் இஸ்லாமிய மக்களிடையே சமய, தேசிய விடயங்களில் பெரும் எழுச்சி ஏற்பட்டது. அது

“இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி”

எனப்படுகின்றது

www.lkedu.lk

மிஷனரிகளின் செயற்பாடுகள்

"கிருஸ்தவ சமயத்தைப் பரப்பவதற்காக வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்து செயற்பட்ட அமைப்புக்களே மிஷனரிகள் எனப்படுகின்றன."

இலங்கையில் செயற்பட்ட மிஷனரி அமைப்புக்கள்

மிஷனரி இயக்கங்கள்	செயற்பட்ட காலம்	செயற்பட்ட பிரதேசம்
லண்டன் மிஷனரி சங்கம்	1804	கரையோரப் பகுதி
பெப்டிஸ்ட் மிஷனரி சங்கம்	1812	கொழும்பு
வெஸ்லியன் மிஷனரி சங்கம்	1814 – 1815	வடக்கு, கிழக்கு பிரதேசங்கள்
அமெரிக்கன் மிஷனரி சங்கம்	1816	யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதி
சேர்ச் மிஷனரி சங்கம்	1818	கொழும்பு, காலி, கற்பிட்டி, மன்னார், கண்டி

www.lkedu.lk

பிரித்தானியரின் நடவெடிக்கைகள்

ஐரோப்பியர் தமது மதத்தினையும் கலாச்சாரத்தினையும் பரப்ப **எழுத்து/ சொற்பொழிவு மற்றும் கல்வி** போன்றவற்றை பயன்படுத்தினர்.

அரசாங்கமும் முழு ஆதரவினை வழங்கியது. மொழிப் பிரச்சனையினைத் தவிர அனைத்து வசதிகளும் கிட்டியது ஆங்கிலேயருக்கு.

மிஷனரி மத குருமார் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளை கற்று தேசிய மொழிகளில் தமது மதத்தினை பரப்பினர்.



எழுத்து



சொற்பொழிவு



கல்வி

www.kalvi.lk

எழுத்து

- தேசிய மொழிகளில் பைபிள் மொழிபெயர்க்கப்படல்
- பத்திரிகை, சஞ்சிகை மற்றும் நூல்களை வெளியிடல்

அச்சிட்ட காலம்	வெளியீட்டின் பெயர்	அச்சிட்ட தாபனம்
1832	மாசிக்க தேக்க	சேர்ச் மிஷனரி சங்கம்
1840	லங்கா நிதானய	சமய பூஸ்திகா சங்கம்
1842	உரகல	பெப்டிஸ்ட் மிஷனரி

www.

சொற்பொழிவுகள்

- பன்சலைக்கு அருகிலும், மக்கள் அதிகம் கூடுமிடங்களிலும் சொற்பொழிவு நடாத்துதல்
- சிலை வணக்கத்தையும், பௌத்த மற்றும் இந்து மதங்களின் மரபுகளை விமர்சித்தல்

கல்வி

- ஆங்கில மொழி அத்தியாவசிய மொழியாக்கபடல்.
- ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்து தமது மொழியினூடாக கிருஸ்தவ சமயத்தைப் பரப்புதல்

மிஷனரியின் செயற்பாடுகளால் இலங்கையின் மதம் மற்றும் கலாச்சாரங்கள் விமர்சிக்கப்பட்டமைக்கும் தேசிய கலாச்ச்ரத்தினையும் மதத்தினையும் பாதுகாப்பதற்கு இலங்கையில் பலர் தேற்றம் பெற்றனர்.

www.ikedu.lk


பௌத்த சமய
மறுமலர்ச்சி

- மிஷனரியினரால் பாதிப்படைந்த பௌத்த சமயத்தையும், கலாசாரத்தையும் பாதுகாக்கும் நோக்கோடு செயற்பட்டனர்.
- கவனிப்பாரற்றிருந்த தேசிய மொழிகளிலான கல்வியை எழுச்சி பெறச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை.

ஆண்டு	முன்னோடியான பௌத்த பிக்கு	பிரிவெனா
1841	வலானை சித்தார்த்த தேரர்	இரத்மலானை பரமதம்ம சேதிய பிரிவெனா
1873	ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்	மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனா
1875	இரத்மலானை ஸ்ரீ தர்மாலோக தேரர்	பேலியகொட வித்தியாலங்கார பிரிவெனா

www.ikeu.lk

அச்சகங்களை நிறுவுதல்

- புலத்கம தம்மாலங்கார ஸ்ரீ சுமண திஸ்ஸ தேரரால் சீய நாட்டு உதவியுடன் அச்சகம் ஒன்றை நிறுவினார்.
  - பெயர் : லங்கோபகார அச்சகம்
  - ஆண்டு : 1862
  - இடம் : காலி
- அதனைத் தொடர்ந்து :
  - லங்காபினவ விஷ்ரத அச்சகம்
  - கவடகதிக அச்சகம்
  - சுதர்ஷண அச்சகம்
  - சரசவி சந்தரெஸ அச்சகம்

www.ikeduk

பௌத்த வெளியீடுகள்



லக்மினி பஹன (1862)



சரசவி சந்தரெஸ



சிங்ஹல பௌத்தயா (1908)




சிங்ஹல ஜாதிய (1967)

www.lkedu.lk

பகிரங்க விவாதங்கள் நடாத்துதல்

- ஆங்கிலேயர்களின் சொற்பொழிவுகளை எதிர்த்து பகிரங்க விவாதங்களை நடாத்தினர்.
- விவதங்களில் "மீகெட்டுவத்தே குணாணந்த தேரர் சிறந்து விளங்கினார்.
- இவர் கொட்டாஞ்சேனை "தீபதுத் தாராமய"வில் வசித்தவர்
- இவரது அணியில் இடம்பெற்றோர்:
  - ஹிக்கடுவ சுமங்கல தேரர்
  - வஸ்கடுவே சுபுதி தேரர்
  - பொத்துவில் இந்திரஜோதி தேரர்
  - இரத்மலானை தம்மாலோக தேரர்

www.ikeu.lk



மீகெட்டுவத்தே
குணாணந்த தேரர்



ஹிக்கடுவ
சுமங்கல தேரர்



இரத்மலானை
தம்மாலோக தேரர்

ஐம்பெரும் விவாதங்கள்

இவை "ஐம்பெரும் விவாதங்கள்/ பஞ்ச மகா விவாதங்கள்" எனப்பட்டது

ஐம்பெரும் விவாதங்கள்

1. 1865 பத்தேகம
2. 1865 வராகொட
3. 1866 உதன் விட
4. 1871 கம்பளை
5. 1873 பாணந்துறை

noolaham.lk

பாணந்துறை விவாதம்

- குணானந்த தேரர் தலைமையில் நடைபெற்றது
- சர்வதேச புகழ் பெற்றது.
- கேர்ணல் ஹென்றி ஸ்டீல் ஒல்காட் அவர்களும் அவரது பாரியாரும் இவ்விவாதத்தினால் கவரப்பட்டே இலங்கை வந்து பௌத்த சமயத்தைத் தழுவிக் கொண்டனர்.



www.ikeuk.lk

மாணவர் செயற்பாடு

1. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் போது கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப முன்வந்த மிஷனரி இயக்கங்கள் யாவை?
2. மிஷனரிகளால் வெளியிடப்பட்ட வெளியீடுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக

ஆண்டு	வெளியீட்டின் பெயர்	அச்சிட்ட தாபனம்

www.ikeda.lk

3. இலங்கையில் பௌத்தர்களால் அமைக்கப்பட்ட முதல் அச்சகம் எது? அதனை அமைத்தவர் யார்? இதற்கு உதவியளித்த நாடு எது?

4. பௌத்த சமய மறுமலர்ச்சியை மையமாகக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.


அச்சகங்கள்	சஞ்சிகைகள்,பத்திரிகைகள்	ஐம்பெரும் விவாதங்கள்

www.ikeou.lk

5. குறுக்கெழுத்துப் போட்டி

3ம் தலைமை : இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி

- குறுக்கெழுத்துப் போட்டி



மேலிருந்து கீழ்

1. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களால் கொழும்பில் அமைக்கப்பட்ட ஆண்கள் பாடசாலை
2. ரத்மலான பரம தம்ம சேதிய விகாரை அமைத்த தேரர்
3. ஐம்பெரும் விவாதங்களில் இறுதி விவாதம் இடம் பெற்ற இடம்
4. பௌத்த மறுமலர்ச்சிப் பத்திரிகைகளுள் ஒன்று
5. 1880 இல் ஒல்கொட் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சங்கம்

இடமிருந்து வலம்

1. இந்து சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடி
2. இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடி
3. ஜினராஜ வித்தியாலயம் அமைந்துள்ள நகரம்
4. பிரித்தானியர் ஆட்சியில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதில் ஈடுபட்ட அமைப்பு (தலை கீழாக உள்ளது)
5. கண்டியில் அமைக்கப்பட்ட பௌத்த ஆங்கிலக் கல்லூரி

www.ilearn.lk

To Be Continued...